بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/12/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - 2

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விஷயம் பல்வேறு கோணங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை அனைத்தும் ஒரே சம்பவம் ஆகும். உஸ்துல் காபா என்ற நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஏமன் நாட்டில் அஸது எனும் கோத்திரத்தின் ஒரு வயோதிகர் தன்னுடைய உண்மையான ஞானத்தின் ஒளியில் ஹரமில் ஒரு நபி தோன்றுவார் என்றும், அவருடைய உதவியாளருடைய வயிற்றில் மச்சம் இருக்கும் என்றும், அவருடைய இடது கால் தொடையில் ஓர் அடையாளம் இருக்கும் என்றும், அவர் மூத்த வயதுடையவராகவும் ஒல்லியான தேகமுடையவராகவும் இருப்பார் என்றும் அத்துடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இன்னும் சில பண்புகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், நேர்வழியில் இருந்து விலகி விட வேண்டாம்; முன் உதாரணத்திற்குரிய சிறந்த வழியை உறுதியோடு பிடித்துக்கொண்டு இறைவன் சார்பாக வழங்கப்படும் செல்வம் மற்றும் பொருள் விஷயத்தில் இறையச்சத்தோடு நடந்து கொள்ளுங்கள் என்றும் எச்சரிக்கையூட்டினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்காவிற்கு திரும்பி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அன்னாரது வாதத்திற்கான சான்றை கேட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏமன் நாட்டில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வயோதிகரை சந்தித்ததைச் சான்றாக எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையைப் பிடித்து, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை என்றும் அன்னார் அல்லாஹ்வுடைய தூதர் ஆவார்கள் என்றும் சாட்சி கூறினார்கள்.

ரியாஸுன் நஸ்ராவில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அறிவிக்கிறார்கள்: குறைஷிய மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, உம்முடைய தோழர் பைத்தியக்காரர் ஆகிவிட்டார்; அவர் ஓரிறைவனின் பக்கம் மக்களை அழைக்கிறார்; தம்மை நபி என்று கூறுகிறார் என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொய் பேசியதை நான் ஒருபோதும் கண்டதில்லை என்று கூறினார்கள். எவ்வித தயக்கமும் மறுப்பும் இன்றி அன்னாரிடம் பைஅத் செய்து அன்னாரை வழிமொழிந்தார்கள். தாங்கள் கொண்டு வந்தது உண்மையாகும் என்று ஒப்புக் கொண்டார்கள். இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்

யாரையெல்லாம் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தேனோ (அவர்கள் அனைவரும்) தடுமாறினார்; அபூபக்ரைத் தவிர.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் செய்தபோது அந்நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியே எங்கோ சென்றிருந்தார்கள். அன்னார் திரும்பி வந்தபோது அன்னாருடைய ஓர் அடிமைப்பெண் அன்னாரிடம், உங்களுடைய நண்பரோ (நவூதுபில்லாஹ்) பைத்தியக்காரராகிவிட்டார். வினோதமான விஷயங்களையெல்லாம் கூறுகிறார். வானவர்கள் தம்மீது இறங்குகின்றனர் என்று கூறுகிறார், என்று கூறினாள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்போதே எழுந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டை அடைந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சில விஷயங்களை முன்னுரையாக எடுத்துக்கூற விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இந்த விஷயம் உண்மைதானா? என்பதை மட்டும் நீங்கள் கூறுங்கள் என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஆம்! சரிதான் என்று கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் தங்களின் மீது நம்பிக்கை கொள்கிறேன் என்று கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! சான்றுகளை எடுத்துக் கூற வேண்டாம் என்று நான் தங்களை ஏன் தடுத்தேன் என்றால், என்னுடைய நம்பிக்கை கண்டுணர்ந்த நம்பிக்கையாக இருக்க வேண்டுமேயொழிய சான்றுகளின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்று விரும்பினேன். ஏனென்றால் தங்களை உண்மையாளர் என்று ஒப்புக்கொண்ட பிறகு எந்த ஒரு சான்றுக்கும் அவசியமில்லை என்று கூறினார்கள்.

சுருக்கமாக எந்த விஷயத்தை மக்காவாசிகள் மறைத்தனரோ அதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் செயலினால் தெளிவாக எடுத்து வைத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நன்மை மற்றும் இறையச்சத்தை ஒப்புக்கொண்ட இவ்வாறான இளைஞர்களை அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒன்றுகூட்டி அவர்களுக்குப் புரிய வைக்க ஆரம்பித்தார்கள். அதன் விளைவால் ஏழு நபர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள். இந்த அனைத்து இளைஞர்களும் 12 வயது முதல் 25 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பெரும் பெரும் சோதனைகள் வந்தன; சொத்துக்களையும் ஊரையும் இழக்க வேண்டியதாயிற்று; அன்பர்களை கொலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அன்னாருடைய உறுதிப்பாட்டில் ஒருபோதும் தடுமாற்றம் வரவில்லை.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சித்தீக் - உண்மையாளர் என பட்டம் சூட்டினார்கள். நன்கு கவனித்துப் பார்த்தால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உண்மைத்தன்மைக்கு ஈடான ஒன்றை காண்பது கடினமாகும் (என்பதை புரிந்து கொள்ளலாம்). எந்த ஒரு நபரும் இயன்ற அளவு முயற்சி செய்து, இயன்ற அளவு துஆவினால் பயன்பெற்று, அபூபக்ருடைய இயல்பில் வண்ணமயமாகாதவரை சித்தீக்கிய மேன்மைகளைப் பெற முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முதன்முதலாக உண்மைப்படுத்தியதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் செயல்களால் நிரூபித்துக் காட்டினார்கள். இறுதி மூச்சு

வரை அதை நிறைவேற்றினார்கள். மரணித்த பிறகும் கூட (ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்.... அவர்கள்) உடன் இருப்பதை விடவில்லை.

சூரா ரஹ்மானுடைய வசனமான, وَ لِمَنۡ خَافَ مَقَامَ رَبِّہٖ جَنَّتٰنِ தம் இறைவனின் உன்னத தோற்றத்திற்கு அஞ்சி நிற்போருக்கு இரு சொர்க்கங்கள் உள்ளன - என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** கூறுகிறார்கள்: எல்லோரையும் விட அதிகமாக அவருக்குத்தான் துன்பம் கொடுக்கப்பட்டது எல்லோரையும் விட அதிகமாக அவர்தான் தொல்லைக்கு ஆளானார். ஆகவே, எல்லோரையும்விட முதலாவதாக நபித்துவ இருக்கையில் அமர வைக்கப்பட்டவரும் அவர்தான். அன்னாருக்கு அல்லாஹ் இங்கேயும் வெகுமதியை வழங்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதல் கலீஃபாவாக நியமித்தான். மறு உலகில் (அன்னாருக்காக) சொர்க்கமே உள்ளது.

வரலாற்றாசிரியர்களைப் பொறுத்தவரை ஆண்களில் முதன்முதலாக நம்பிக்கை கொண்டவரைக் குறித்து கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அல்லாமா அஹ்மத் பின் அப்துல்லாஹ் எழுதுகிறார்கள்: இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அதை வெளிப்படுத்திய, பருவ வயதையுடைய முதல் அரேபிய நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) பின் ஆபூ கஹாஃபா ஆக இருந்தார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் யாரென்றால் சவ்ர் குகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த இரண்டாம் நபர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட நபர்களுள் முதலாவதாக இருந்தார்கள். ஐரோப்பியாவின் பிரசித்தி பெற்ற வரலாற்றாசிரியர் ஸ்பிரிங்கர் எழுதுகிறார்: 'அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பத்தில் முஹம்மது (ஸல்) அவர்களின் மீது நம்பிக்கை கொண்ட விஷயம் எதை சுட்டிக் காட்டுகிறது என்றால், முஹம்மது (ஸல்) ஏமாறக் கூடியவராக இருக்கலாம். ஆனால் ஏமாற்றக் கூடியவராக ஒருபோதும் இருக்கவில்லை என்பதற்கு மிகப் பெரும் சான்றாகும்.' சர் வில்லியம் முயிர் அவர்களுக்கும் இக்கருத்தில் முழுமையான உடன்பாடு உள்ளது.

உஸ்துல் காபாவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அன்பு, நன்மை மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் காரணமாக ஒரு கூட்டம் அன்னாரின் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. எந்த அளவுக்கென்றால், சொர்க்கத்திற்கான நற்செய்தி பெற்ற 10 சஹாபிகளுள் 5 பேர் - அதாவது, ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) எனும் தமது நூலில் எழுதுகிறார்கள்:** (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட) இந்த சஹாபிகள் அனைவரும் எந்த அளவு கண்ணியமிக்க பெரும் அந்தஸ்துடைய சஹாபிகளாக இருந்தார்கள் என்றால், உயர்மட்ட சஹாபிகளாக அவர்கள் கணக்கிடப்படுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் அருளுக்குரிய நாவால் சொர்க்கத்திற்கான நற்செய்தி

கூறிய 10 சஹாபிகளுள் இவர்களும் உள்ளனர். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய சஹாபிகளும் ஆலோசகர்களுமாக இருந்தார்கள்.

மக்கத்து காஃபிர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோர் மீது பலவிதமான கொடுமைகளை செய்தனர். அநீதிக்கும் கடுமைக்கும் ஆளானவர்கள் பலவீனமான, அடிமையாக இருந்த முஸ்லிம்கள் மட்டுமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் பாதுகாப்பாக இருக்கவில்லை. சீரத் ஹல்பியா எனும் நூலில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறைஷியர்களின் சிங்கம் என்று அழைக்கப்பட்ட நவ்ஃபல் பின் அதவிய்யா என்பவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களையும் இஸ்லாத்தை வெளிப்படுத்தியதன் காரணமாக இருவரையும் பிடித்து ஒரே கயிற்றில் கட்டி வைத்தான். இதன் காரணமாகவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களையும் கரீனைன் என்றும் கூறுவார்கள். அதாவது இணைந்திருந்த இரு தோழர்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜித் ஹராமில் கஅபாவின் மேற்குப் புறச் சுவருக்கருகில் தொழுது கொண்டிருந்தார்கள். உக்பா பின் அபீ முஅய்யத் என்பவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கழுத்தில் துணியைச் சுற்றி நன்கு இறுக்க ஆரம்பித்தான். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அங்கு வந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட்டு உக்பாவை தள்ளிவிட்டார்கள். اَتَقْتُلُوْنَ رَجُلًا اَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ எனது இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காகவா ஒரு நபரை நீங்கள் கொலை செய்வீர்கள்? என்று கேட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஒருமுறை மஸ்ஜித் ஹராமில் இணைவைப்போர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முற்றுகையிட்டு விட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்ததும் அவர்கள் அங்கு வந்து விட்டார்கள். اَتَقْتُلُوْنَ رَجُلًا اَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ وَقَدْ جَآءَكُمْ بِالْبَيِّنٰتِ مِنْ رَّبِّكُمْ என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்யப் போகின்றீர்களா? மேலும் அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அம்மக்களைப் பார்த்து கேட்டார்கள். இதைக் கண்ட இணைவைப்போர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டுவிட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அடிக்க ஆரம்பித்தனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் முடிகளை தொட்டுப் பார்க்கும்போது அவை கையோடு வந்து கொண்டிருந்தன. இந்நிலையில் அன்னார் எங்களிடத்தில் வந்தார்கள். تَبَارَكْتَ يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ அதாவது, கண்ணியம் மற்றும் மதிப்பிற்குரியதே! உனக்கு அருள் வழங்கப்பட்டுள்ளது! என்று அன்னார் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடன் யார் போர் செய்திருந்தாலும் நான் அவரை கொன்று வீழ்த்தியிருக்கிறேன். ஆனால் அனைவரையும் விட தைரியசாலி யாரென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். பத்ர் போரில், எந்தவோர் இணைவைப்பாளரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நெருங்குவதற்கு முன்பு என்னை எதிர்கொள்ள வேண்டும் என்று கூறி தமது வாளை ஏந்தியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு அருகில் வந்து நின்றார்கள். பிறகு இன்னொரு முறை, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தொந்தரவு கொடுத்த குறைஷியர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)

அவர்கள் அடித்து விரட்டினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு கணப்பொழுது ஃபிர்அவ்னின் சமுதாயத்து நம்பிக்கையாளரின் பூமி முழுவதற்குமுள்ள நன்மைகளை விடச் சிறந்ததாகும். ஏனென்றால், அந்த நபர் தன் நம்பிக்கையை மறைத்து வைத்திருந்தார். இவர்களோ, அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ தம் நம்பிக்கையை அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒரு முறை சில எதிரிகள் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் தனியாக இருப்பதைக் கண்டு அன்னாரை பிடித்துக் கொண்டார்கள். அன்னாருடைய கழுத்தில் துணியைப் போட்டு முறுக்க ஆரம்பித்தார்கள். அன்னாருடைய உயிரே போய் இருக்கும்! அப்போது தற்செயலாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அந்த கஷ்டத்திலிருந்து அன்னாரை விடுவித்தார்கள். அதற்காக அந்த மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை எந்த அளவுக்கு அடித்தார்கள் என்றால், அன்னார் மயக்கமுற்று நிலத்தில் விழுந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சமயத்தில் அன்னாரிடம் 40 ஆயிரம் திர்ஹம் இருந்தது. அன்னார் அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவழித்தார்கள். அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டதன் காரணமாக துன்புறுத்தப்பட்டு வந்த 7 அடிமைகளை விடுதலை செய்தார்கள். அந்த அடிமைகளுள் ஹஸ்ரத் பிலால் (ரலி), ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி), ஹஸ்ரத் ஸின்னீரா (ரலி), ஹஸ்ரத் நஹ்தியா (ரலி) மற்றும் அவர்களின் மகள், பனீ மூமல் உடைய ஓர் அடிமைப்பெண் மற்றும் உம்மே உபேஸ் ஆகியோர் இருந்தனர்.

ரோம் தேசத்தைச் சார்ந்த ஹஸ்ரத் ஸின்னீரா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பெண்களுள் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட போது அவர்களின் பார்வை பறிபோய் விட்டது. (கடவுள்களான) லாத் மற்றும் உஸ்ஸா ஆகியவை மறுக்கப்பட்டதன் காரணமாக ஸின்னீரா (ரலி) அவர்களை குருடாக்கி விட்டன என்று இணைவைப்போர் கூறினர். இதற்கு ஹஸ்ரத் ஸின்னீரா (ரலி) அவர்கள், லாத் மற்றும் உஸ்ஸா ஆகியவை என்னை எவ்வாறு குருடாக்கும்? அவற்றுக்கே கண் தெரியாதே! எனக்கு பார்வை போனது அல்லாஹ்வின் நாட்டத்திற்கேற்பவே நிகழ்ந்துள்ளது. இது விண்ணின் தீர்ப்பாகும். எனது பார்வையைத் திரும்ப வழங்குவதில் எனது இறைவன் ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றான் என்று கூறினார்கள். இரவில் படுத்து காலையில் கண் விழிக்கும்போது, அல்லாஹ் அவர்களுக்குப் பார்வைத்திறனை திரும்ப வழங்கி விட்டிருந்தான். இதைக்கண்ட குறைஷியர்கள் இது முஹம்மது (ஸல்) அவர்களின் மாயவித்தை ஆகும் என்று கூறினார்கள். இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட துன்பங்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கண்டபோது அன்னார் அவர்களை விலைக்கு வாங்கி விடுதலை செய்து விட்டார்கள்.

*இந்தக் குறிப்பு இன்ஷா அல்லாஹ் இனிமேலும் தொடரும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**